STOCK FILE

93

113

தமிழ் நாடு அரசு

சுருக்கம்

073977

பொதுப் பணிகள் — காந்திகிராமம் ஊரக நிலையத்தினால் (நிகர் பல்கலைக் கழகம்) வழங்கப்படும் செயல்முறை இயற்பியல் முதுநிலை பட்டப் படிப்பு மற்றும் செயல்முறை வேதியியல் முதுநிலை பட்டப் படிப்பு (M.Sc., Applied Physics and M.Sc., Applied Chemistry) ஆகியவற்றை பிற பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் இயற்பியல் மற்றும் வேதியியல் முதுநிலை பட்டப் படிப்பிற்கு இணையானதாகக் கருதி பொதுப் பணிகளில் வேலை வாய்ப்பிற்கு அங்கீகரித்தல் — ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (ஆர்) துறை.

அரசாணை நிலை எண்.133

நாள்:28.7.1999
பிரமாதி, ஆடி 12
திருவள்ளுவர் ஆண்டு 2030.

படிக்கப்பட்டது:

1. அரசாணை நிலை எண்.423, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (ஆர்) துறை, நாள்:31.12.92.
2. அரசாணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (ஆர்) துறை, நாள்:20.12.93.
3. காந்திகிராமம் நிகர் பல்கலைக் கழக பதிவாளரது கடித எண். ஏ.சி.6/ஆர்-3/94-95, நாள்:27.9.94.
4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலரது கடித எண்.4746/ஆர்.என்.டி.-ஏ5/93, நாள்:17.9.96.

.....

ஆணை:

மேலே படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில், காந்திகிராமம் ஊரக நிலையத்தால் வழங்கப்படும் செயல்முறை இயற்பியல் முதுநிலை பட்டப் படிப்பு (M.Sc., Applied Physics) மற்றும் செயல்முறை வேதியியல் முதுநிலை பட்டப் படிப்பு (M.Sc., Applied Chemistry) ஆகியவற்றை வேலை வாய்ப்பில் பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பில் சிறப்பினங்கள் குறிப்பிடப்படாமல் கல்வித் தகுதியாக எங்கு குறிப்பிடப்பட்டுள்ளதோ, அப்பணியிடங்களில் வேலை வாய்ப்பு பெற அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் இரண்டு பட்ட மேற்படிப்புகளைத் தமிழகம் மற்றும் வெளி மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்கள் அங்கீகாரம் அளித்துள்ளதாகவும், ஆகையால் செயல்முறை இயற்பியல் முதுநிலை பட்டப் படிப்பு மற்றும் செயல்முறை வேதியியல் முதுநிலை பட்டப் படிப்புகளை பிற பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் இயற்பியல் முதுநிலை பட்டப் படிப்பு மற்றும் வேதியியல் முதுநிலை பட்டப் படிப்புகளுக்கு நிகரானக் கருதி, பொதுப் பணிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் வேலை வாய்ப்பிற்காக அங்கீகரிக்குமாறு காந்திகிராமம் ஊரக நிலையப் பதிவாளர் அரசைக் கேட்டுள்ளார்.

2. காந்திகிராமம் ஊரக நிலைய (நிகர் பல்கலைக் கழகம்) பதிவாளரது கோரிக்கை, 20.12.93 நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (ஆர்) துறையின் அரசாணை நிலை எண்.441-ல் ஆணையிட்டவாறு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரைத் தலைமையாகக் கொண்டு அமைக்கப்பட்ட குழுவின் முன் பரிந்துரைக்காக வைக்கப்பட்டது.

3. 19.8.96 அன்று நடந்த குழுக் கூட்டத்தில் காந்திகிராமம் ஊரக நிலையத்தால் வழங்கப்படும் செயல்முறை இயற்பியல் முதுநிலை பட்டப் படிப்பு மற்றும் செயல்முறை வேதியியல் முதுநிலை பட்டப் படிப்பு (M.Sc., Applied Physics and M.Sc., Applied Chemistry ) ஆகியவற்றை பிற பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் இயற்பியல் முதுநிலை பட்டப் படிப்பு மற்றும் வேதியியல் முதுநிலை பட்டப் படிப்புகளுக்கு (M.Sc., Physics and M.Sc., Chemistry ) இணையாகக் கருதி, பொதுப் பணிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் வேலை வாய்ப்பிற்கு அங்கீகரிக்குமாறு குழு அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

4. மேற்காணும் குழுவின் பரிந்துரைகளை, தீவிர பரிசீலனைக்குப் பின் ஏற்றுக் கொள்ள அரசு முடிவெடுத்துள்ளது. அவ்வாறே, காந்திகிராமம் ஊரக நிலையத்தால் (நிகர் பல்கலைக் கழகம்) வழங்கப்படும் செயல்முறை இயற்பியல் முதுநிலை பட்டப் படிப்பு மற்றும் செயல்முறை வேதியியல் முதுநிலை பட்டப் படிப்பு ( M.Sc., Applied Physics and M.Sc., Applied Chemistry ), பிற பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் இயற்பியல் முதுநிலை பட்டப் படிப்பு மற்றும் வேதியியல் முதுநிலை பட்டப் படிப்புகளுக்கு (M.Sc., Physics and M.Sc., Chemistry ) இணையாகக் கருதி, பொதுப் பணிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் வேலை வாய்ப்பிற்கு அங்கீகரித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

உஷா பாலகிருஷ்ணன்.
அரசுச் செயலர்.

பெறுநர்

அனைத்து அரசுச் செயலர்கள், சென்னை-9.
அனைத்து துறைத் தலைமை அலுவலர்கள்.
பதிவாளர், காந்திகிராமம் ஊரக நிலையம்,
(நிகர் பல்கலைக் கழகம்),
காந்திகிராமம், திண்டுக்கல் மாவட்டம்-624 302.
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை-600 002.

நகல்:

அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின்
அனைத்துப் பிரிவுகள், சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

[signature]
பிரிவு அலுவலர்.

Subtd. to S.O.

May be trsfd. to R... sec

24.8.95.

24-8-95